யா/யாழ் இந்துமகளிர் கல்லூரி

தமிழ்மொழியும் இலக்கியமும்

முதலாந் தவணைப் பரீட்சை - 2020

தரம் :- 06 நேரம் :- 2.00 மணித்தியாலம்

## பகுதிI

❖ மிகப் பொருத்தமானவிடையின் கீழ் கோடிடுக

01. வானத்துநட்சத்திரங்கள் கண் சிமிட்டும் அழகுதான் என்னே! இங்குநட்சத்திரங்கள் என்பதன் ஒத்தகருத்துச் சொல்
    1. திங்கள் 2. ஆதவன் 3. பூமி 4. தாரகை

02. கமலன் போட்டியில் தோற்றகவலையில் அழுதான் . இங்குகவலைஎன்பதன் ஒத்தகருத்துச் சொல்
    1. மகிழ்ச்சி 2. கோபம் 3. துக்கம் 4. ஆரவாரம்

03. நண்பன் எழுதியகடிதம் கிடைத்தது. இதில் கடிதம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்
    1. மடல் 2. பாடல் 3. சஞ்சிகை 4. கவிதை

04. தமிழிலுள்ளமுதல் எழுத்துக்களின் எண்ணிக்கை
    1. 12 2. 18 3. 30 4. 216

05. ‘வு’என்றஉயிர்மெய்யெழுத்தில் உள்ளஉயிர்மெய் எழுத்துக்கள்
    1. வ் + இ 2. உ + வ் 3. எ + வ் 4. ஓ + வ்

06. மெல்லின் மெய் எழுத்துக்கள்
    1. க், ச், ட், த், ப், ற் 3. ட், த், ண், ந், ப், க்
    2. ங்,ஞ், ண், ந், ம், ன் 4. ய், ச், ர், ங், ம், வ்

07. பின்வருவனவற்றுள் உயிர் நெடில் எழுத்துளது?
    1. அ 2. இ 3. எ 4. ஈ

08. ஆசிரியர் வகுப்பறைக்குவருகிறார் என்பதுஎன் வகைவாக்கியம்
    1. தனிவாக்கியம் 3. கலப்புவாக்கியம்
    2. கூட்டுவாக்கியம் 4. வியங்கோள் வாக்கியம்

09. பின்வருவனவற்றுள் தன்மைஒருமைச் சொல்லாகவருவது
    1. நான் 2. நீ 3. நாங்கள் 4. அவர்கள்

10. ஐயோபாவம் இவன் நல்லவனாயிற்றேஎன்றவாக்கியத்தில் இடம்பெறவேண்டியநிறுத்தற் குறியீடு
    1. வினாக்குறி 2. காற்புள்ளி 3. முற்றுப்புள்ளி 4. வியப்புக்குறி



kalvi.lk

11. ஏமாந்தநாய் என்றபாடத்தைஎழுதியவர்
1. சுப்பிரமணியபாரதியார் 3. பேராசிரியர் சோதி
2. செ.கணேசலிங்கன் 4. பெருஞ்சித்திரனார்

12. யானைப் பறவைஎனஅழைக்கப்பட்டபறவைஎது?
1. பென்குவின் 2. தீக்கோழி 3. மோவாஸ் 4. ஆட்டிக்கிரேண்

13. பணத்தைவீண்விரயம் செய்பவன்
1. கஞ்சன் 2. உலோபி 3. ஊதாரி 4. வள்ளல்

14. 'நான் வைத்தியராகவருவேன்' இக்கூற்றுஎக்காலத்தில் அமைந்துள்ளது
1. இறந்தகாலம் 2. நிகழ்காலம் 3. எதிர்காலம் 4. பழையகாலம்

15. பனைக்குவடலிபோலதென்னைக்கு
1. மரம் 2. செடி 3. பிள்ளை 4. குட்டி

16. நேற்றுகமலாபாடசாலைக்கு.............................................
1. வந்தாள் 2. வந்தார்கள் 3. வருவாள் 4. வருகின்றாள்

17. ஒருவாக்கியத்தின் முடிவில் இடப்படுவது
1. முற்றுப்புள்ளி 2. அடைப்புக்குறி 3. காற்புள்ளி 4. வினாக்குறி

18. அந்தாட்டிக்காவில் நீர் வாழ்வுக்குச் சிறத்தலடைந்தபறவை
1. கசோவரி 2. எழு 3. பென்குயின் 4. கிவி

19. கடவுள் நம்பிக்கைஉள்ளவன்
1. நாத்திகன் 2. ஆத்திகன் 3. ஞானி 4. சந்நியாசி

20. 'ஒற்றுமையேபலம்'என்றகருத்துஅமையக் கூடியபழமொழி
1. உப்பிட்டவரைஉள்ளளவும் நினை
2. ஆத்திரக்காரனுக்குபுத்திமத்திமம்
3. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
4. அறம் செயவிரும்பு

(20 x 1 =20புள்ளிகள்)



kalvi.lk

## பகுதிII

முதலாம், இரண்டாம், மூன்றாம்வினாக்கள் உட்படஎல்லாமாகஐந்துவினாக்களுக்குவிடைதருக

01. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவுசெய்துஏறத்தாழ 150 சொற்களுக்குகட்டுரைஎழுதுக
    1. சூழலைப் பாதுகாப்போம்
    2. உடைந்தகுடையின் சுயசரிதை
    3. நான் விரும்பும் பெரியார்
    4. காலைப்பொழுது

(10புள்ளிகள்)

02. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவுசெய்துஏறத்தாழ 75 சொற்களுக்குக் குறையாமல் கடிதம் எழுதுக
    1. வெகுவிமரிசையாககொண்டாடவுள்ளஉமதுபிறந்தநாள் விழாவுக்குவருமாறுஉமதுமாமாவிற்குகடிதம் எழுதுக
    2. உமக்குதேவையானகற்றல் உபகரணங்களைவாங்கிஅனுப்புமாறு கூறி,உமதுவெளிநாட்டில் வசிக்கும் தந்தைக்குகடிதம் ஒன்றுஎழுதுக

(10புள்ளிகள்)

03. எல்லாவினாக்களுக்குவிடைதருக
    1. சரிவிகிதஉணவுஎன்றால் என்ன?
    2. குரங்கின் சேட்டையாகக் கூறப்படும் விடயம் யாது?
    3. சேவல் பூனைக்கு கூறியஅறிவுரையாது?
    4. தங்கம் விதைத்தால் தங்கம் விளையுமாஎன்னும்கதையின் ஆசிரியர் யார்?
    5. மலேரியாக் காய்ச்சலைவேறுஎவ்வாறு கூறுவர்?

(10புள்ளிகள்)

04. பின்வரும் சொற்களைப் பயன்படுத்திகருத்துப் புலப்படவாக்கியம் அமைக்குக
    1. கரை,கறை
    2. வரை,வறை
    3. ஆனி,ஆணி
    4. உழவு,உளவு
    5. அரம் ,அறம்

(10 புள்ளிகள்)



kalvi.lk

05. பின்வரும் வாக்கியங்களில் உள்ளஎழுவாய்,பயனிலைகளைஅட்டவணைப்படுத்துக

1. நான் சோறுசாப்பிட்டேன்
2. சூரியன் உதித்தது
3. ஆசிரியர் வகுப்பறைக்குவருகிறார்
4. எலியைப் பூனைபிடித்தது
5. பாரதியார் சிறந்தபுலவர்

(10 புள்ளிகள்)

06. பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமானநிறுத்தற் குறியீடுகளை இடுக

1. நிலம்நீர் தீகாற்றுஆகாயம் என்பனஐம்பூதங்களாகும்
2. குமார் படம் வரைந்தாள்
3. தலைவாவருகவருக
4. அறம் செயவிரும்புஎன்றார் ஔவையார்
5. நீபாடசாலைசென்றாயா

(10 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

# ONLINE CLASSES

## TAMIL AND ENGLISH MEDIUMS

அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்....

**GRADE 6**

திறமை வாய்ந்த ஆசிரியர்களினூடான சிறந்த வழிகாட்டலுடன் கூடிய வினைத்திறன் மிக்க நிகழ்நிலை வகுப்புகள்.

**ADMISSION** FREE

**075 287 1457**

| | | |
|---|---|---|
| தமிழ் | வரலாறு | சுகாதாரம் |
| விஞ்ஞானம் | English | புவியியல் |
| கணிதம் | ICT | குடியியல் |

- **Spoken English Classes.**
- **Sinhala Reading and Writing Classes.**
- **Map Marking Classes**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும். (தனிப்பாட அனுமதிகளையும் பெற்றுக்கொள்ள முடியும்)



கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page